# சங்க இலக்கிய ஆய்வில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பங்களிப்பு - 'தமிழர் சால்பு' என்ற நூலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

வதனரேகா அஜந்தகுமார்[1], கி.விசாகரூபன்[2]

*aathmiajan@gmail.com[1] , kvisakaruban@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருக்கம்-** சங்ககால இலக்கியங்கள் தமிழின் செம்மொழி அந்தஸ்துக்கு கட்டியம் கூறிய பெருமைக்குரியன. இந்த சங்க இலக்கியங்கள் பற்றிய பல ஆய்வுகள் பலவிதங்களில் பல பார்வைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை சான்றோர் இலக்கியங்கள் எனவும் தமிழர் தமது நாகரிகத்தின் உச்சக் காலத்தில் எழுந்தவை எனவும் கொண்டு ஒரு சாரார் ஆய்வு நடத்தினர். தொல்காப்பிய பொருளிலக்கணத்துக்கும் சங்ககால நூல்களுக்குமிடையே உள்ள தொடர்பை இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்ற அடிப்படையில் வைத்தும் ஆராய்ந்தனர். மற்றுமொரு பிரிவினர் தொல்காப்பிய தரவுகளையும் சங்க இலக்கியத் தரவுகளையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் அவை சுட்டும் சமூகவியல் காரணிகளின் அடிப்படையில் தமது இலக்கிய ஆய்வை நடத்தினர். இவற்றில் எல்லாம் ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் வகிபாகம் கவனத்துக்குரியது ஆகும். இலங்கையைப் பொறுத்தவரையில் சங்க இலக்கியங்களைக் கற்றும் கற்பித்தும் உரைவிளக்கம் தந்தும் பதிப்பித்தும் வந்ததன் பயனாகவே தமிழரின் வரலாறு, பண்பாடு, சமூகவாழ்வு என்பவற்றைத் தேடுகின்ற ஆய்வுப்புலம் உதயமாகியது எனலாம். மல்லாகம் வி.கனகசபைப்பிள்ளை, பேராசிரியர்களான சுவாமி விபுலானந்தர், சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் என்று சங்க இலக்கிய ஆய்வுப்புலத்தில் ஈடுபட்டவர்களை வரிசைப்படுத்தலாம். இவர்களில் தொடக்கமும் முதன்மையும் ஆழமும் மிக்க சங்க இலக்கிய ஆய்வைத் தன்னுடைய 'தமிழர் சால்பு' நூலுக்கு ஊடாக அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே வெளிக்கொணர்ந்த பெருமைக்குரியவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆவார். 'தமிழர்சால்பு' நூலுக்கு ஊடாக வெளிப்படும் அவரது சங்க இலக்கிய ஆய்வுப்பணியின் கனதியையும் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக்கட்டுரை ஆகும். சங்ககால அரசரின் வரலாறு, அரசியல், போர் முறைகள், வழிபாட்டுமுறைகள், நம்பிக்கைகள், சமயவாழ்க்கை, மக்கள் பாகுபாடு, தொழிலும் வணிகமும், அக்காலப் பெண்களின் சமுதாய நிலை, கல்வியும் கலைகளும் போன்ற துறைகளையும், பகுதிளையும் பதினான்கு இயல்களில் விரிவாக ஆராய்ந்துள்ளார். தமிழியல் என்ற துறை வளர்வதற்கு முன்னரே அத்துறையில் ஆழமான ஆய்வைச் சங்க இலக்கியங்கள் வழியாக மேற்கொண்டவர் என்ற பெருமையை இவர் பெறுகின்றார். ஆராய்ச்சியாளர்கள் பலரின் தவறான முடிவுகளிற்கு இவரின் ஆய்வு பதில் சொல்லுவதாக அமைந்தது. தொடர்ந்து வந்த ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டுவதாகவும் இன்றும் நினைத்து வியப்படையக்கூடியவாறும் இவரது தமிழர் சால்பு ஆய்வு அமைந்தது. இந்த ஆய்வானது விவரண ஆய்வு முறைக்கு ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன்மூலம் பேராசிரியரின் தமிழ்ப்பணியில் முதன்மைப் பணிகளில் ஒன்றாக இந்த ஆய்வினைத் தெளிதலும், சங்க இலக்கியம் தொடர்பான வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வில் இவ்வாய்வின் தனித்துவத்தினை இனங்காட்டலும் இவ்வாய்வின் மூலம் நிகழ்த்தப்படுகின்றது. மிகக்குறைவானவர்களே சங்க இலக்கிய ஆய்வில் இலங்கையிலிருந்து ஈடுபட்ட போதிலும் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஆழமான தமது தனித்துவங்களை பதிந்து சென்றதற்கு வித்தியானந்தனின் தமிழர்சால்பு மிகச்சிறந்த சான்றாக விளங்குவதை இவ்வாய்வு கண்டடைகின்றது

**திறவுசொற்கள்:** ஈழத்து அறிஞர்கள், தமிழர்சால்பு, தமிழியல், சங்க இலக்கியம், வித்தியானந்தன்,

## I.அறிமுகம்

சங்க இலக்கிய ஆய்வில் ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் வகிபாகம் கவனத்துக்குரியது. சங்க இலக்கியப் படைப்பு முதல் அதன் செம்மையுறு பதிப்பு, உரையெழுதுதல், பாட பேத ஆராய்ச்சிகள் – விளக்கங்கள், மார்க்சிய ஒளியில் புதிய திசை வழியில் இட்டுச்செல்லல் என்று விரியும் பங்களிப்பு ஒருசேர நோக்கப்படும் போது ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் பணி பெரியதாகத் தோன்றுகின்றது. சங்க இலக்கியங்கள் பற்றிய புலமை நாட்டமான ஆய்வு 1920, 1930களில் தான் ஆரம்பமாகத் தொடங்கியது இதில் கணிசமான பங்களிப்பு தமிழ் நாட்டறிஞர்களுக்கு இருந்தாலும் பதிப்பு - உரை - ஆய்வு - மார்க்கிய ஆய்வு என்ற நிலைகளில் ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பு கவனத்துக்கு உரியதாகும். சங்க இலக்கிய வாசிப்பிற்கு புத்தொளி பாய்ச்சியவர்களில் தனிநாயகம் அடிகளார், சு.வித்தியானந்தன், பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் பங்களிப்பு முதன்மையானது. இதில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பங்களிப்பை கவனப்படுத்துவதாக இவ்வாய்வு விளங்குகின்றது.

## II. பேராசிரியர் சு.வித்தியானந்தன்

இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர்களில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுக்குத் தனியான ஓர் இடம் இருக்கின்றது. இலக்கியத் தென்றல் (1953), தமிழர் சால்பு (1954) கலையும் பண்பும் (1961 - இந்நூல் பிறையன்பன் என்ற பெயரில் வெளிவந்தது),தமிழியற் சிந்தனைகள் (1971) ஆகிய திறனாய்வு நூல்கள் வித்தியானந்தனால் எழுதப்பட்டன. இந்த நூல்கள் தமிழ் இலக்கியத்தின் சால்பினையும், தமிழர், முஸ்லிம்களின் சால்பினையும் எடுத்துரைக்கும் உரைகற்களாக விளங்கின.

நாட்டார் பாடல்கள், நாட்டுக்கூத்துகள் என்பவற்றை மீள் உருவாக்கம் செய்ததில் இவரின் பங்களிப்பு முக்கியமானது. இதனோடு இணைந்த பதிப்புப் பணியிலும் முக்கியமான பங்களிப்பை வழங்கினார். உயர்கல்வி ஆய்விலும் நாட்டார் நெறி நின்ற

ஆய்விலும் செயலிலும் ஈடுபட்டு ஜனவசியப்பட்ட பேராசிரியராக விளங்கினார். இருபத்தாறு வயதில் கலாநிதிப்பட்டத்தை இலண்டனில் நிறைவு செய்தவராய், தமிழ்ப் பேராசிரியராய், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகப் புகழ்பெற்று விளங்கிய இவரை தமிழியல் ஆய்வின் முன்னோடி என்று பேசவைக்கின்ற நூலே தமிழர் சால்பு ஆகும்.

### III. சங்க இலக்கிய ஆய்வில் பேராசிரியர் சு.வித்தியானந்தன்

சங்க இலக்கிய ஆய்வுப்புலத்தில் ஈடுபட்டவர்களில் முதன்மையும் ஆழமும் மிக்க கண்டடைதல்களை தன்னுடைய 'தமிழர் சால்பு' நூலூடாக அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே வெளிக்கொணர்ந்த பெருமைக்குரியவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆவார். 'தமிழர் சால்பு' நூலுக்கு ஊடாக வெளிப்படும் அவரது சங்க இலக்கிய ஆய்வுப்பணியின் கனதியையும் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக்கட்டுரை ஆகும்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களின் திறனை அவரது இருபத்தாறு வயதில் நிறைவுசெய்த கலாநிதிப்பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவமான தமிழர் சால்பில்(1954) நாம் எளிதாகக் கண்டுகொள்ளலாம். சங்க இலக்கியத்தில் அவருக்கு இருந்த தேடலையும் தாடனத்தையும் இந்த ஆய்வேடு புலப்படுத்தி விடுகின்றது. சங்க இலக்கியத்தை தமிழியல் ஆய்வின் வழி முன்னெடுத்த முன்னோடி என்ற பெருமையைப் பெற்றுக்கொள்கின்றார்.

பண்பாடு என்ற சொல்லுக்கு நிகரான சால்பு என்ற தமிழ்ச்சொல்லை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இருந்து இவர் கண்டெடுத்தார். பத்துப்பாட்டு பற்றிய வரலாற்று சமூக மொழியியல் ஆய்வாகவே 'தமிழர்சால்பு' என்ற நூல் விளங்கியது. தமிழியல் என்பது தமிழுடன் சமூகஇ பொருளாதார பண்பாட்டு ஆராய்ச்சி சிந்தனைகளையும் உள்ளீர்த்து புது வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்ற முறையியலாகும். இவரது இம்முயற்சியும் தடமுமே கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் ஈடுபாட்டிற்குப் பெருவழி செய்தது.

சங்ககாலத்தமிழரின் சால்பினைக் கூற எழுந்த இந்த நூல் பதினான்கு இயல்களைக் கொண்டது. சங்ககால அரசரின் வரலாறு,அவர்களின் அரசியல், போர்முறை, தமிழருக்கே உரிய வழிபாட்டு முறைகள், ஆரிய நம்பிக்கைகள், நில இயற்கைப் பாகுபாடு, பண்டைத் தமிழரின் வணிகம், பெண்கள், சமுதாய நிலை, கல்வி, கலைகள் என்பவற்றிலே ஆழமான ஆய்வினை இந்த நூல் முன்னெடுத்துள்ளது. இவை தொடர்பில் ஸ்ரீநிவாச ஐயங்கார், இராமச்சந்திர தீட்சிதர், எஸ்.வையாபுரிப்பிள்ளை ஆகியோர் சில முன்னாரம்ப ஆய்வுகளை தொட்டுச் சென்ற போதிலும் முழுதளாவிய ஆய்வை நிகழ்த்திய பெருமையை இவர் பெறுகின்றார்.

### IV. 'தமிழர் சால்பு' என்ற ஆய்வு நூலின் தனித்துவங்கள்

'தமிழர் சால்பு' என்ற வித்தியானந்தனின் ஆய்வு பல்வேறு தனித்துவங்களைக் கொண்டதாய் விளங்குகின்றது.

1. இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்குத் திராவிடர் செய்த தொண்டுகளை ஆராய்கின்றது.
2. இலக்கியங்களின் காலத்தெளிவைக் கூர்மையாக வெளிப்படுத்துகின்றது.
3. சங்ககால அரசர் பற்றிய வரலாற்று ஆராய்ச்சியை நிகழ்த்துகின்றது
4. சங்ககால அரசின் தோற்றம் பற்றிய சமூகவியல் பின்னணியை ஆராய்கின்றது.
5. உரையாசிரியர்களின் அறிஞர்களின் கருத்துகளோடு ஆதாரபூர்வமாக முரண்பட்டுத் தனது கருத்தை நிலைநிறுத்துகின்றார்.
6. சங்ககாலத்தில் கிராமம் - நகரம் பற்றி இருந்த நுண்நிலை வேறுபாடுகளைக் கவனப்படுத்தியுள்ளார்.
7. சங்ககாலத்தில் சமணம், பௌத்தம் பற்றிய கருத்துகளை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார்.
8. பண்டைத் தமிழரின் சால்பினை சான்றுகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.
9. சமூக அடுக்குகள் குறித்த நுண்ணாய்வைச் செய்துள்ளார்.
10. சங்ககாலப் பெண்கள் பற்றித் தனியே கவனப்படுத்தியுள்ளார்
11. வடநூலில் இருந்து தமிழ் வேறுபட்டுத் தனித்துவம் பெறுவதை நிறுவியுள்ளார்.

#### 1. திராவிடரின் தொண்டு

தமிழர் சால்பை வெறும் விவரண ஆய்வாக நிகழ்த்துவதில் பேராசிரியருக்கு விருப்பு இருக்கவில்லை. இந்தியப் பண்பாட்டுக்குத் திராவிடர் செய்த அரும்பெரும் தொண்டுகளை மறைப்பில் இருந்து வெளிக்கொணரும் வேணவா அவரை இயக்கப்படுத்தியது. இந்த நூலின் அடிப்படை நோக்கமும் அதுவாகவே அமைந்தது.

இந்திய வரலாற்றிலே திராவிடருக்குரிய இடத்தைப் பற்றியும் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குத் திராவிடர் செய்த அரும்பெரும் தொண்டுகளைப் பற்றியும் அறிஞர் இதுவரை அமைவுற ஆராயவில்லை. பழைய இந்தியப் பண்பாட்டினது சிறந்த கூறுகள் யாவும் ஆரியருக்கே உரியனவென்று கூறுவது அத்துறை ஆராய்ச்சியில் ஈடுபட்ட பெரியோரின் பண்பாகிவிட்டது [1 ப.13].

**2. இலக்கியங்களின்காலத்தெளிவு**

தமிழியல் ஆய்வின் ஊடாகத் தமிழர் சால்பை வெளிப்படுத்த முனைந்த பேராசிரியர் அவர்கள், சங்ககாலத்தில் தோன்றிய பத்துப்பாட்டு இலக்கியங்களின் ஊடாகவே தனது ஆய்வினை மேற்கொண்டார். ஆயினும் எட்டுத்தொகை நூல்களையும் உபகருவிகளாகக் கொண்டார். சங்ககாலத்தில் தோன்றியதாகக் கூறப்பட்ட இலக்கியங்களின் தோற்றக்காலம் பற்றிய தெளிவு மிகுந்த ஆராய்ச்சிக் கூர்மையுடன் இவரிடம் காணப்பட்டது. தொல்காப்பியம்,சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை சங்ககாலத்தவை என்பதை ஏற்க முடியாதவை என்கின்றார். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும் எட்டுத்தொகையில் கலித்தொகையும் பரிபாடலும் சங்ககாலத்திற்குப் பிந்தியவை என்பதை ஆதாரங்களுடன் கூறுகின்றார்.இக்காலத்தெளிவு அவரின் ஆய்வுத் தெளிவையும் சங்கப்பனுவல்களை ஆழ்ந்து அறிந்து ஆராய்ந்த புலமைத் தேட்டத்தையும் காட்டுகின்றது.

**3. சங்ககால அரசர் பற்றிய வரலாற்று ஆராய்ச்சி – ஒப்பீட்டு வன்மை**

ஒரு காலத்தில் அரசியல் ஆய்வு சரியாக அமைந்தாலே இலக்கிய வழியான ஆய்வும் பொருத்தமானதாக அமையும். இந்தவகையிலே சங்ககால அரசர்களின் காலம் பற்றிய ஆராய்ச்சி, மேன்னாட்டு வரலாற்றாசிரியர்களின் கருத்துடன் ஒப்பு நோக்கல், இதன் வழியாக சங்ககாலம் பற்றிய நிறுதிட்டமான கால ஆராய்ச்சி முடிவுக்கு வரல் ஆகிய குணநலன்களை வித்தியானந்தனின் இந்த ஆய்வேட்டிலே தெளிவாகக் காணமுடிகின்றது. கிரேக்க உரோம வரலாற்றாசியர்களின் கருத்துக்களை எல்லாம் தனது கருத்துக்கு வலுச்சேர்க்க ஆசிரியர் பயன்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘சோழவழியில் முதன்முதல் ஆண்ட வெளியன்தித்தன் கி.மு 50 ஆம் ஆண்டில் அரசுகட்டில் ஏறியிருக்கலாம். சோழர் பரம்பரையில் கடைசியாக ஆண்டவன் கோச்செங்கணான் என முன்பு கூறினோம். இவன் அவ்வழியில் பத்தாவதாக ஆண்ட அரசன், பசும்பூண் பாண்டியனுடன் ஒத்தகாலத்தவனாகிய உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னிக்குப் பின்தொடங்கிக் கோச்செங்கணான் இறுதிக்காலம் வரை ஆண்ட சோழ அரசருக்கு இருபத்தைந்து ஆண்டுகள் வீதம் கணித்துப்பார்த்தால் சோழர் ஆட்சி கி.பி 200 உடன் முடிவடையும். எனவே கி.மு முதலாம் நூற்றாண்டு தொடங்கிக் கி.பி மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதிவரையுள்ள காலப்பரப்பைச் சங்ககாலமென ஒருவாற்றாற் கொள்ளலாம் [2].

‘பழந்தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்களிலும் நகர்ப்பெயர்களிலும் கூடக் கிரேக்க உரோம ஆசிரியர் நூல்களும் சங்கநூல்களும் ஒத்திருக்கின்றன[3].

**4. சமூகவியல் பின்னணியை ஆராயும் போக்கு**

சங்ககால அரசின் தோற்றம் பற்றிய சமூகவியல் பின்னணியை வெளிப்படுத்தும் ஆய்வுக்கூர்மையை இவரிடம் காண்கின்றோம். மார்க்சிய வெளிச்சத்தில் சங்க இலக்கியத்திற்கு புத்தொளி பாய்ச்ச முனைந்தவர்களுக்கு இவரே முன்னோடி என்பதை இத்தன்மையான இடங்களில் கண்டுணரலாம்.

‘தமிழ்மக்களுடைய பண்பாட்டுவளர்ச்சியில் முல்லைநிலமும் அந்நில வாழ்க்கையும் ஒரு சிறந்தநிலையை அடைந்திருந்தன. ஆடு, மாடு,எருமை முதலிய காட்டு மிருகங்களைப் பழக்கி,அவற்றை வளர்த்து,அவை அளித்த பால்,தயிர்,வெண்ணெய் முதலியவற்றை விற்று இடையர் பொருள் ஈட்டினர். எண்ணிறந்த ஆடமாடுகளை வைத்திருந்த குடும்பத்தவரின் தந்தை,செல்வ மிகுதியால் முதன்மை பெற்றான். பல குடும்பங்களுக்கு அவன் தலைவனானான். கோன் என்னும் இடையரைக் குறிக்கும் சொல்லே அரசனையும் குறித்தது. எனவே நாட்டிற்குத் தலைவனாயிருக்கும் அரசனின் தலைமை முல்லைநிலத் தலைவனிடமே தோன்றியிருத்தல் வேண்டும். ஈற்றில் பொருளாதாரத்திலும் தொகையிலும் சிறந்த உழவர்(மருதநிலத்) தலைவனே தமிழ்நாட்டு அரசியலில் வலிமை சிறந்துவிளங்கினான்’[4].

போரும் போர் முறைகளும் பற்றிய அவரது ஆராய்விலே மறப்பண்பு எவ்வாறு புரையோடியிருந்தது என்பதையும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளோடும்

போர் வாழ்வோடு பின்னிப்பிணைந்திருந்த தன்மையையும் போருக்கான காரணங்களையும் புலவருக்கும் போருக்கும் இடையேயான தொடர்புகளையும்இ போர் நிகழ்ச்சிகளையும் மிக ஆழமாக வெளிப்படுத்தியுள்ளார். அறங்களையும் வழக்கங்களையும் சங்கப்பாடல்களின் ஊடாக பயணித்து வெளிப்படுத்துவதில் வல்லவராகவும் இவர் விளங்கியிருந்தார்

**5. உரையாசிரியர்கள், அறிஞர்களின் கருத்துகளோடு ஆதாரபூர்வமாக முரண்படுதல்**

சங்க இலக்கியத்துள் புகுந்து ஆழ்ந்தகன்ற ஆய்வை மேற்கொண்டதன் விளைவால் உரையாசிரியர்களுடனும்இ பிற அறிஞர் கருத்துகளோடும் முரண்பட்டுத் தனது கருத்தை நிறுவும் வல்லாளராக விளங்கினார். ஈழத்தறிஞர்களின் சங்க இலக்கியப் புலமைக்கு இவையெல்லாம் சான்றாக அமையும்.

'பத்துப்பாட்டிற்குச் சிறந்த உரைகண்ட நச்சினார்க்கினியார் மதுரைக் காஞ்சியுட் கூறப்பட்ட ஐவர் குழுவைச் சிலப்பதிகாரத்துட் கண்ட ஐம்பெருங் குழுவாகவே கருதி உரைவகுத்தார். ஆனால் சிலப்பதிகாரமும் பத்துப்பாட்டும்வெளவேறு காலத்தனவாதலின் நச்சினார்க்கினியார் கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று'[5].

'சில அறிஞர் சங்க நூல்களில் சில ஆரியத் தெய்வங்கள் கூறப்பட்டுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு, சங்ககாலப் பகுதியில் தமிழர் நாட்டில் ஆரியர் சமயவாழ்க்கைப் பண்பே சிறப்புற்று இருந்தது என்று கொண்டனர். இக்கூற்று ஏற்கத்தக்கதொன்றன்று.

**6. சங்ககாலத்தில் கிராமம் - நகரம் பற்றி இருந்த நுண்நிலை வேறுபாடு**

சங்ககால சமுதாயம் பற்றிய தெளிவை தமிழர்களின் வழிபாட்டு முறை பற்றிய ஆய்வின் ஊடாக வெளிப்படுத்துவதில் பேராசிரியர் அக்கறை காட்டினார். சமூகவியல் ஆய்வு வழியே இது அவருக்குச் சாத்தியமாயிற்று. இதன் வழி கிராமம் - நகரம் பற்றிய நுண்நிலை வேறுபாடுகளை கொணர்ந்தார்.

'சங்ககாலத்திலே தமிழகத்தில் அந்தணரும் முனிவரும் வாழ்ந்தனர் எனினும் அவர்கள் செல்வாக்குப் பிற்காலத்திலே இருந்தஅளவுக்கு மேம்பட்டிருக்கவில்லையெனக் கூறலாம். சங்கநூல்களில் ஆரிய நம்பிக்கைகளும், சமயக்கோட்பாடுகளும் கூறப்பட்டிருப்பது உண்மையே. ஆனால் பொதுவாக நோக்குமிடத்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவை இடம்பெறவில்லை எனலாம். நகரவாழ்க்கையில் அவற்றின் செல்வாக்கு சிறிது சிறிதாகப் பெருகிக்கொண்டே வந்தது. பொதுமக்கள் தங்கள் தங்கள் மூதாதையரின் வழிபாட்டு முறைகளையே பின்பற்றினர்' [7].

**7. சங்ககாலத்தில் சமணம், பௌத்தம் பற்றிய கருத்துக்கள்**

சங்ககால இலக்கியங்களின் ஊடான தமிழர் சால்பை வெளிப்படுத்தும் ஆய்விலே இந்துசமய வழிபாட்டிலே ஆரியரை விட திராவிடரின் தொன்மையைப் பேசியதோடு மாத்திரமல்லாமல் சமணம்இ பௌத்தம் ஆகியவை நிலவிய விதத்தையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ள கூர்மையான அவதானத்தையும் நேர்மையையும் காணமுடிகின்றது.

'மதுரை,காஞ்சி போன்ற தலைசிறந்த நகரங்களில் சமண பௌத்த துறவிகள் தங்கித் தத்தம் சமய உண்மைகளைப் புகட்டுவதற்குப் பள்ளிகள் இருந்தன. காஞ்சிநகரில் எல்லாச் சமயத்தவரும் தொழுதுவிழா அயர்வரென அறிகிறோம். இவருள் சமண பௌத்தர் இருத்தலும் கூடும்.

**8. பண்டைத் தமிழரின் சால்பு**

'பண்டைத் தமிழ் மக்கள் மிகைபட உண்ணாதவர்: சிறிதே சினமுடையவர் சிலவாகிய சொற்களைச் சொல்லுதலோடு பல் சொற்களைச் சான்றோர் சொல்லக் கேட்டலையுடையவர். நுண்ணுணர்வினர். பெருங்கொடையாளர், கலங்கிய கள்ளோடு தண்ணிய கட்டெளிவை அளிப்பவர். எல்லோருக்கும் கனிந்த தாளிதத்தோடு கூடிய கொழுவிய துவையலைப் பிறருக்கு அளிப்பவர். எல்லோருக்கும் பணிவை விரும்பி அவரை வணங்கிய சொல்லால் தழுவிப் பேசும் இன்சொல்லையுடையவர். இவ்வாறு பலருக்கும் பயன் உண்டாக்கத்தக்க செயல்களைச் செய்து வாழ்ந்தனர் தமிழ்ப் பெருமக்கள்.'9 என்ற முடிவுக்கு சங்க இலக்கியங்களின் ஆழ்ந்த வாசிப்பின் ஊடாக இவர் வந்து சேர்ந்தார். சமயத்தின் பொருட்டு வாழாத ஒரு சமூக வாழ்க்கையை அவர் கண்டறிந்தார்.

**9. சமூக அடுக்குகள் குறித்த நுண்ணாய்வு**

பழந்தமிழர் சமுதாயத்திற் பிற்காலத்தில் எழுந்ததைப் போலச் சாதிப்பிரிவினை இருந்தமைக்குச் சான்றுகள்

இல்லை என்றும் மக்கட்பாகுபாடு நில இயற்கையையும் தொழிற்பண்பையும் அடிப்படையாகக் கொண்டே இருந்தது என்ற ஆய்வு முடிவுக்கும் வந்தார். பாரத நாட்டின் சமூக அமைதிகள் பல காலப்போக்கில் வளர்ச்சியுற்றிருந்தன என்பது வரலாற்றுண்மை. அதே முறையில் ஆரியச் சாதிப்பிரிவு அற்றஇ தமிழ்நாட்டு ஐந்நில மக்களும் பல நூற்றாண்டுகளாகத் தம்முடைய பழைய பழக்கவழக்கங்களுடன் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்ற என்ற சமூக அடுக்குப் பற்றிய காலப் பார்வையுடையராய் இவரை இவ் ஆய்வுநூல் அடையாளப்படுத்துகின்றது.

### 10. பெண்கள் பற்றிய பதிவு

சமுதாயத்தில் பெண்கள் மிகவும் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தனர். பெண்கள் சமூக விழாக்களிலே பங்குபற்றிச் சுதந்திரமான வாழ்க்கை நடத்தினர். கணவருடன் கள்ளருந்தினர், நீர்விளையாடினார்கள், மகளிர் ஆடவருடன் குலவிப் பழகுவதற்கு ஒரு வகையான தடையும் இருக்கவில்லை.

கற்பு ஒழுக்கம் அகநானூற்றிலும் சிறுபாணாற்றுப்படையிலும் வலியுறுத்தப்படுவது காட்டப்பட்டுள்ளது. வினைகள் இயற்றுவதில் கணவருக்குப் பெண்கள் துணையாக இருந்தனர். அவர் பரணில் ஏறிக் கிளிகளை ஓட்டிப் பயிரைப் பேணுவர். மலைகளில் வளரும் பிரம்பினாற் செய்யப்பெற்ற கவணிணாலும் மற்றும் கருவியினாலும் கல்லெறிந்தும் முரசம் அறைந்தும் வானிலே திரியும் பறவைகளைக் குடம்பை நோக்கிப் பெயரச் செய்வர். மகளிர் விளையாடும் பல விளையாட்டுக்கள் ஆராய்ச்சியின் வழி காட்டப்படுகின்றன. வண்டல், புனல் விளையாட்டுஇ பந்தாடல், கழங்கு, என்பன பற்றிச் சுருக்கமாக விளக்கியுள்ளார். மகளிரின் அணி, ஆடை முதலியன பற்றி ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். மிக அதிகமான நுணுக்கமான தகவல்களை ஆராய்ந்துள்ளார். பொதுமகளிரின் தொழிலையும் வஞ்சகத்தையும் மதுரைக்காஞ்சி வழி ஆசிரியர் எடுத்துக்காட்டுகின்றார். பிற்காலத்தைவிட இக்காலத்துப் பெண்கள் சுதந்திரமானவர்கள் என்ற முடிவுக்கு வருகின்றார்.

### 11. வடநூலில் இருந்து தமிழ் வேறுபடும் தனித்துவம்

சங்ககாலத் தமிழ் இலக்கியம் வடமொழி இலக்கியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதென்பது புலனாகும் என்ற ஆய்வு முடிவுக்குப் பேராசிரியர் இந்நூலின் ஆய்வுவழி கண்டறிகின்றார்.

அகமும் புறமுமே சங்க இலக்கியத்தின் பொருளாக அமைந்தன. ஆனால் பழைய வடமொழி இலக்கியம் சமயம்,தத்துவம், பௌராணிகம் ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை எனலாம் என்று ஒப்பீடு செய்கின்றார். பொதுமக்கள் வாழ்க்கைக்கும் சங்க இலக்கியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இப்பண்பு பழைய வடமொழி இலக்கியத்திலும் பிற்காலத் தமிழ் இலக்கியத்திலும் காணப்படாத ஒன்று என்ற தனித்துவத்தையும் இனங்காட்டுகின்றார்.

## V. முடிவுரை

தமிழர் சால்பு என்ற வித்தியானந்தன் அவர்களின் நூல் தமிழியல் ஆய்வுக்கு முன்னாரம்பியாக அவர் இயங்கியுள்ளதை அத்தாட்சிப்படுத்துகின்றது. அதன்வழி இலக்கிய ஆய்வாய் சமூக ஆய்வாய் பண்பாட்டு ஆய்வாய் பல பரிணாமங்களைக் காட்டிநிற்கின்றது. சங்க இலக்கியத்தில் ஈழத்தவர்களின் தாடனத்திற்கும் ஆழ்ந்தகன்ற பார்வைக்கும் சான்றாகின்றது. சங்க இலக்கியத்தில் சமூகநிலை நின்ற ஆய்வுகள் வளர்வதற்கான வேராக இவர் நின்றுள்ளமையும் புலப்படுத்துகின்றது. தமிழியல் ஆய்வு விரிய வேண்டிய திசைகளுக்கான எத்தனிப்பை மேற்கொண்ட வகையிலும் தொடக்கியாக இருந்த வகையிலும் ஒரு வகை மதிப்புணர்வை இந்தநூலின் வழியாக வித்தியானந்தன் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார் எனின் அது மிகையில்லை.

### உசாத்துணை நூல்கள்

1. வித்தியானந்தன்,சு தமிழர் சால்பு, கல்ஹின்னை, கண்டி,1954
2. யோகராசா,செ சங்ககாலம் முதல் சமகாலம்வரை( பேராசிரியர் சி.மௌனகுருவுடனான நாடகம் தவிர்ந்த நேர்காணல், மகுடம் வெளியீடு,2015
3. வித்தியானந்தன்,சு வித்தியின் பார்வையும் பதிவும்,சேமமடு பதிப்பகம்,2009
4. சிவத்தம்பி,கா ஈழத்தின் தமிழ் இலக்கியச் சுடர்கள். குமரன் புத்தக இல்லம்,2010
5. வேலுப்பிள்ளை, ஆ ஈழத்து அறிஞர் ஆளுமைகள், குமரன் புத்தக இல்லம், 2010